# வரலாற்றை வசமாக்கிய நம் தலைவர்கள்!

**தி**ருவண்ணாமலையில் ஒரு வரலாற்றுத் திருப்பம் நடந்தேறியுள்ளது. ஆன்மீக பக்தர்களுக்கு எந்தளவுக்குத் திருவண்ணாமலை முக்கியமானதோ, அதே அளவிற்கு, ‘அனைவருக்கும் அனைத்தும்‘ என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ள கழக வரலாற்றிலும் திருவண்ணாமலை தனித்துவமானது.

1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் தி.மு.க. முதன்முதலாக களமிறங்கியபோது, தி.மு.க.வின் முதல் நாடாளுமன்ற உறுப்பினரைத் தந்தது திருவண்ணாமலைதான். அதுபோல, கழகம் முதன்முறையாக ஆட்சி அமைப்பதற்கு முன் 1963ஆம் ஆண்டு நடைபெற்ற திருவண்ணாமலை இடைத்தேர்தலில் கழகம் பெற்ற வெற்றிதான், தமிழ்நாடு ஓர் அரசியல் பண்பாட்டு ரீதியான ஆட்சி மாற்றத்திற்கு ஆயத்தமாகிவிட்டது என்பதை டெல்லிக்கு உணர்த்தியது. அந்தத் திருவண்ணா மலையில்தான் டிசம்பர் 14ஆம் தேதியன்று, கழகத்தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் கழகத்தின் இளைஞரணிச் செயலாளர் நடத்திக்காட்டிய இளைஞரணியின் வடக்கு மண்டல நிர்வாகிளின் மாபெரும் மாநாடு, தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாகும்.

இந்திய ஒன்றியத்தில் இளைஞர் சக்தி எப்போதுமே வலிமையானது. அதனால்தான், “இளைய பாரதத்தினாய் வா..வா..வா..” என்று மகாகவி பாரதியார் பாடினார். “சிம்புட் பறவையே.. சிறகை விரி..” என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அழைத்ததும் இளைஞர்களைத்தான். இந்திய விடுதலைப் போராட்டத்திலும், மொழிப் போர்க்களத்திலும் இளைஞர்கள் பங்கேற்றனர். பெரியாரின் பெரும் படையின் தளபதியாக இருந்த பேரறிஞர் அண்ணாவும் அப்போதும் இளைஞர்தான்.





**தந்தை பெரியாரின் கொள்கைகளை அரசியல் களத்தில் வென்றெடுப்பதற்காக பேரறிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கியபோது முத்தமிழறிஞர் கலைஞர் உள்ளிட்ட அண்ணாவின் தம்பிகள் அனைவரும் 25 அல்லது 27 வயதுக்காரர்கள் தான். இந்தியாவில் ஒரு மாநிலக்கட்சி முழுக்க முழுக்க இளைஞர்களால் உருவானது என்றால், முதன்முதலில் அதனை சாதித்துக் காட்டிய இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம்.**

கழகத்தின் வழியில் அதன்பின் எத்தனையோ மாநிலக்கட்சிகள் இந்தியா முழுவதும் உருவாகியுள்ளன. அசாம் மாநிலத்தில் மாணவர்கள் போராட்டம் வெடித்த 1980களில் அசாம் கண பரிஷத் என்ற கட்சி தொடங்கப்பட்டது. மிக விரைவாக அங்கே அது ஆட்சிக்கும் வந்தது. திருமணமாகாத 30+ வயது இளைஞரான பிரஃபுல் குமார் மகந்தா அசாம் மாநிலத்தின் முதலமைச்சரானார். இன்றைய தலைமுறையினருக்கு மகந்தாவையும் அசாம் கண பரிஷத்தையும் நினைவிருக்கிறதா என்பதே கேள்விக்குறிதான்.

அதே நேரத்தில், 1949ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகம், 18 ஆண்டுகள் தன் களப்பணிகளை மேற்கொண்டு, தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று, 1967ல் ஆட்சி அமைத்தது. இந்தியாவில் ஒரு மாநிலக் கட்சி அந்த மாநிலத்தில் ஆட்சியை அமைக்க முடியும் என்ற வரலாற்றுச் சாதனையைப் படைத்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அவருடைய மறைவுக்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் தன் தோளில் சுமந்து, கழக உடன்பிறப்புகளைத் தன் இதயத்தில் சுமந்த தலைவரான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், அரை நூற்றாண்டுகாலம் இந்த இயக்கத்தைப் பல நெருக்கடிகளிலும் கட்டிக்காத்தார். மீண்டும் மீண்டும் அரியணையில் ஏற்றினார்.

**அத்திக்கடையான்**

அண்ணா அவர்கள் கட்சி தொடங்கியபோது இளைஞர்களாக இருந்தவர்கள், 30 ஆண்டுகள் கழித்து, மூத்த குடிமக்கள் என்ற நிலைக்கு வந்திருந்தனர். அந்த நேரத்தில், இயக்கத்தில் இளம் ரத்தம் பாய்ந்தால்தான், மூத்த தலைவர்களின் அனுபவமும், இளைஞர்களின் வேகமும் இணைந்து கழகத்தை வளர்த்தெடுக்கும் என்பதால், 1980ஆம் ஆண்டு ஜூலை 20ஆம் தேதி மதுரை ஜான்சிராணி பூங்காவில் இளைஞரணியைத் தொடங்கினார் தலைவர் கலைஞர்.

**அந்த இளைஞரணியைப் பட்டித்தொட்டியெங்கும் விதைத்து வளர்த்தவர் நம் இன்றைய தலைவர் தளபதி அவர்கள். தமிழ்நாட்டில் அவர் செல்லாத கிராமமே இல்லை, அவர் இருவண்ணக் கொடியேற்றாத கழகக் கொடிக்கம்பமே இல்லை என்கிற வகையில் இளைஞரணியை வளர்த்தெடுத்தார். அப்போது கழகம் ஆட்சியில் இல்லை. அ.தி.மு.க. ஆட்சியின் அடக்குமுறையையும், கழகத்தில் சிலர் ஏற்படுத்திய பிளவையும் எதிர்கொண்டு, தலைவர் கலைஞரின் எண்ணங்களுக்கு ஏற்றபடி வில்லில் இருந்து பாயும் அம்பாக செயல்பட்டு சரித்திரம் படைத்தவர் நம் இன்றையத் தலைவர் தளபதி அவர்கள்தான்.**

ஒரு தலைமுறையைக் கடந்திருந்தது திராவிட முன்னேற்றக் கழகம். புதிய இளைஞர்களுக்கு கழகத்தின் கொள்கை தெரிய வேண்டும். கழகத்தின் கட்டமைப்பு புரிய வேண்டும். இளைஞரணியில் உள்ள ஒவ்வொருவரும் உழைத்திட வேண்டும். அதற்கேற்ற செயல்திட்டங்களை உருவாக்கி அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றினார் தளபதி அவர்கள். கல்வராயன்மலை, ஏற்காடு, விராலிமலை உள்பட பல இடங்களிலும் கொள்கைப் பயிற்சி வகுப்புகள் இரண்டு நாட்கள், மூன்று நாட்கள் நடத்தப்பட்டன. கழகத்தின் மூத்த நிர்வாகிகள் வகுப்புகள் எடுத்தனர். தளபதி உள்ளிட்ட இளைஞரணியினர் அங்கேயே தங்கியிருந்து கொள்கை வகுப்புகளைக் கேட்டனர்.

அதுபோலவே, களப்பணியிலும் இளைஞரணியே முன்னின்றது. கழகம் வில்லாம். நின் அணியே கணையாம் என்று முத்தமிழறிஞர் கலைஞர் எடுத்துரைக்கக்கூடிய அளவில் இளைஞரணியை சிறப்பாக வழிநடத்தி, இந்தியாவில் வேறெந்த இயக்கத்திலும் இல்லாத வகையில், பலமான கட்டமைப்பைக் கொண்டதாக தி.மு.க இளைஞரணியை உருவாக்கியவர் நம் தளபதி அவர்கள். அவருடைய உழைப்பையும் செயல்திறனையும் தலைவர் கலைஞர் பொது மேடையிலேயே பாராட்டினார். அந்த உழைப்புக்கும் செயல்திறனுக்கும் அடையாளமாகவும் அங்கீகாரமாகவும் அமைந்தது, 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நெல்லையில் நடைபெற்ற கழக இளைஞரணியின் முதல் மாநாடு.

அந்த மாநாட்டின் எழுச்சி 15 ஆண்டுகள் கழித்தும் குறையவில்லை என்பதைக் காட்டுவதாக 2024ஆம் ஆண்டு ஜனவரியில் சேலத்தில் நடந்த இளைஞரணியின் இரண்டாவது மாநில மாநாடு அமைந்தது. கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாதுகாத்து வளர்த்த இளைஞரணியின் பொறுப்பை மட்டும் தன் பிள்ளையிடம் ஒப்படைக்கவில்லை, இன்றைய இளைஞரணியில் உள்ள ஒவ்வொருவரையுமே தன் பிள்ளையாகக் கருதுகிற தாயாகத்தான் இருக்கிறார்.

**தாயின் சபதத்தை நிறைவேற்றுவேன் என்பது போல இளைஞரணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அப்பாவுக்குத் தப்பாத பிள்ளையாக உழைத்துக் கொண்டே இருக்கிறார். தொகுதிகள்தோறும் கொள்கைப் பயிற்சி முகாம், தொகுதிகள்தோறும் நூலகம், முரசொலி பாசறைப் பக்கம், அறிவுத் திருவிழா, இல்லந்தோறும் இளைஞரணி என இலட்சியத் தெளிவுடனும் தொலைநோக்குப் பார்வையுடனும் ஓயாமல் உழைத்து வருகிறார்.**

இளைஞரணி என்பது கழகத்தின் இதயம். அதன் இரத்த ஓட்டம் தங்குதடையின்றி இருக்க வேண்டும். அதனால்தான், மாவட்ட - ஒன்றிய- நகர- பகுதி இளைஞரணி நிர்வாகிகள் என்பதைக் கடந்து தமிழ்நாட்டில் உள்ள கிளைகள்தோறும் இளைஞரணி நிர்வாகிகள், தமிழ்நாட்டில் உள்ள 68,400+ பாகங்களிலும் இளைஞரணி நிர்வாகிகள் நியமிக்கப்பட்டிருப்பதன் மூலம் ஏறத்தாழ 5 இலட்சத்திற்கும் அதிகமான நிர்வாகிகள் இளைஞரணிக்காகத் தமிழ்நாடு முழுவதும் உள்ளனர். இப்படியொரு இளம் இரத்தம் கொண்ட படை எந்த இயக்கத்திற்கும் கிடையாது. இளைஞரணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வதில் தலைவர் தளபதி அவர்கள் எந்த அளவுக்கு நேரில் அக்கறை செலுத்துவாரோ அதே முறையில், இன்றைய இளைஞரணிச் செயலாளரும் ஒவ்வொருவரையும் நேர்காணல் செய்து, அதிலிருந்து திறமையான செயல்திறன் மிக்க நிர்வாகிகளைத் தேர்வு செய்திருக்கிறார்.

திருவண்ணாமலையில் நடைபெற்றது பொது மாநாடு அல்ல. ஏறத்தாழ 91 தொகுதிகளைச் சார்ந்த இளைஞரணியின் வடக்கு மண்டல நிர்வாகிகளான 1,30,000 பேர் மட்டுமே கலந்து கொண்ட சந்திப்பு. ஆனால், அதுவே ஒரு மாநில மாநாடு போல சிறப்பாக நடைபெற்றுள்ளது. இதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற எந்நாளும் இளைஞர்களின் பக்கமுள்ள இயக்கத்தின் வலிமை.

**கழகத் தலைவர் அவர்கள் தாயாக- தந்தையாக இருந்து வளர்த்தெடுத்த இளைஞரணி, இன்று இந்தியா போற்றும் திராவிட மாடல் அரசின் முதலமைச்சரின் அத்தனை செயல்பாடுகளையும் கடைக்கோடி மக்களிடமும் கொண்டு செல்லக்கூடிய வகையில் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது. தாய் வளர்த்த பிள்ளை, அந்தத் தாய்க்குப் பெருமை சேர்க்கும் வகையில் தன் கடமையை செய்யக்கூடியதாக மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் கட்டமைத்திருக்கிறார்.**

75 வயதைக் கடந்த இயக்கம் இன்றும் இளமையாக உள்ளதற்கு காரணம், கொள்கைப் பாதையில் உறுதியாகப் பயணித்து வரும் தலைவர்கள்தான். அதனால்தான், எந்தக் கொம்பனாலும் தொட்டுக்கூடப் பார்க்க முடியாத இயக்கம் என்ற பெருமையுடன் வரலாற்றை வசப்படுத்தியிருக்கிறார்கள் நம் தலைவர்கள்!

## செஞ்சி பேரூராட்சியில் “என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி” பரப்புரை!

### செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, டிச. 15 -

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பரப்புரையை திமுக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

இதையடுத்து விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி பேரூராட்சியில்

என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி தேர்தல் பரப்புரை நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார். பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட் டப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ கலந்து கொண்டு பாகம் எண் 249ல் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடிதிமுகவின் வெற்றியை உறுதிப் படுத்தும் வகையில் தேர்தல் பரப்புரையை தொடங்கி வைத்துதிராவிட மாடல் அரசின் திட்டங்களையும் சாதனைகளையும் அடங்கிய துண்டு பிரசுரங்களை ஒவ்வொரு வீடாகவழங்கி பரப்புரையை மேற்கொண்டனர்.

தொடர்ந்து ஒவ்வொரு வீட்டிலும் திராவிட மாடல்அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை திமுக பூத் கமிட்டி உறுப்பினர்கள் வழங்கி தேர்தல் பரப்புரையை மேற்கொண்டனர்.

நிகழ்ச்சியில்மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பேரூராட்சி கவுன்சிலர் சீனிவாசன், திமுக நிர்வாகிகள் பழனி, ஏழுமலை, அருண், ஆனந்த், ராஜ், பார்த்தசாரதி, கார்த்தி, முருகன், காதர், செழியன், உள்ளிட்ட

வாக்குச்சாவடி முகவர்கள் ,பூத் ஏஜென்ட் நிர்வாகிகள்,பூத் கமிட்டி நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தென்காசி மாவட்டம் – பாவூர் சத்திரம்

## இரயில்வே மேம்பால திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை!

### மக்களவையில் மரு.ராணி ஸ்ரீ குமார் குற்றச்சாட்டு!

புதுடெல்ல,. டிச. 16 -

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் இரயில்வே மேம்பால திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்றவில்லை என மக்களவையில் மரு.ராணி ஸ்ரீகுமார் குற்றச்சாட்டி னார்.

நாடாளுமன்ற மக்களவையில் மருத்துவர் ராணி ஸ்ரீகுமார் பேசிய



தாவது.

தென்காசி மாவட்டத்தில் ஒன்றிய அரசின் உள்கட்டமைப்பு திட்டங்கள் மிகவும் காலதாமதமாகிறது.

பாவூர்சத்திரத்தில் இரயில்வே மேம்பாலத் திட்டத்தை ஒன்றிய அரசு நிறைவேற்ற வில்லை. இதனால் நெல்லை தென்காசி நான்கு வழி சாலையை பயன்படுத்தும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

மேலும் கொல்லம் திருமங்கலம் சாலையில் உள்ள இலஞ்சி மேம்பாலத் திட்டம் நிறை வேற்றப்படாததையும் சுட்டிக்காட்டி பேசினார்.

இவ்வாறு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர்.ராணி ஸ்ரீகுமார் மக்களவையில் பேசியுள்ளார்.